திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் அனைத்துத்துறைகளில் நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்டப்பணிகள் குறித்து ஆய்வுக்கூட்டம் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் நடைபெற்றது. உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கோ.மலர்விழி மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் பலர் உள்ளனர்.

விவசாயிகளுக்கு எதிரான மூன்று வேளாண் சட்டங்களுக்கு ஆதரவளித்த விவசாயிகளின் எதிரிகளே!

10 ஆண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் 'மா" விவசாயிகளுக்கு நீங்கள் செய்தது என்ன? 'மா" விவசாயிகளுக்கு ஆதரவு போராட்டமா? அரசியல் நாடகமா?

தி.மு.க. மாநில அமைப்புசாரா ஓட்டுநர் அணி மாநிலச் செயலாளர் டி.செங்குட்டுவன் கேள்வி!

கிருஷ்ணகிரி, ஜூன் 20 - தி.மு.க. மாநில அமைப்பு சாரா ஓட்டுநர் அணி மாநிலச் செயலாளர் டி.செங்குட்டுவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 'மா" விவசாயி களுக்கு ஆதரவாக போராட் டம் நடத்த உள்ள அ.தி.மு.க.வினர் 10 ஆண்டுகால அ.தி.மு.க. ஆட்சியில் 'மா" விவசாயி களுக்கு செய்தது என்ன?

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சுமார் 1லட்சம் ஏக்கரில் மா பயிரிடப்பட்டு, ஆண்டிற்கு சுமார் 3 லட்சம் மெட்ரிக் டன் 'மா" விளைகிறது. மேற்படி 'மா" விளைச்சல் ஆண்டிற்காண்டு கூடுதலாகவும் அல்லது குறை வாகவும் மாறி மாறி விளையும். அதேப்போல் ஆண்டிற்காண்டு 'மா" விலையும் வித்தியா சப்படுவது தொடர்ந்து நடைபெற்று வருவது அனைவரும் அறிந்ததே!

2 லட்சத்திற்கு மேற்பட்ட பணியாளர்கள், ஆண்டுதோறும் மாம்பழக்கூழ் ஆலைகள் மற்றும் மா அறுவடை பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள். ஆண்டு தோறும் சுமார் ரூ.700 கோடிக்கு மேல் மாழ்பழக்கூழ் ஏற்றுமதி மற்றும் மாம்பழ விற்பனை மூலம் அந்நிய செலாவணி கிடைத்து வருகிறது.

இந்தாண்டு விளைச்சலை உரிய நேரத்தில் கொள்முதல் செய்யாமல் மாம்பழக்கூழ் ஆலை உரிமையாளர்கள் 'சிண்டிகேட்" போட்டுக்கொண்டு கொள்முதல் செய்யாததாலும், 'கல்டார் மருந்தின்" காரணமாகவும், மாம்பழங்கள் மரத்திலேயே கெட்டு அழுகி விழுகிறது என்பது அனைவரும் அறிந்ததே. இதனால் 'மா" விவசாயிகள் பாதிக்கப்பட்டது உண்மையே!

இந்நிலையில், கடந்த 12.06.2025 அன்று சேலத்திற்கு வருகை தந்த முதல்வர் அவர்கள் மற்றும் வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோரிடத்தில் 'மா" விவசாயி என்கிற முறையிலும், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் என்கிற முறையிலும் நான் 'மா" விவசாயிகளை காப்பாற்றிட மாம்பழக் கூழ் ஆலை உரிமையா ளர்களை உடனே ஆலைகளை திறந்து மாம்பழங்களை கொள்முதல் செய்யக் கோரியும்,

குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயம் செய்திட கோரியும் மனு அளித்ததின் பேரில் முதல்வர் அவர்கள், வேளாண்துறை அமைச்சர் மூலம் மாவட்ட ஆட்சியரிடம் பேசி, உடனே ஆலைகளில் மாம்பழங்களை கொள்முதல் செய்திட அறிவுறுத்தி யதின் பேரில், தற்போது 'மா": கொள்முதல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 'மா" விவசாயி களுக்கு குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயம் செய்வது குறித்தும் அரசு பரிசீலிக்க துவங்கி யுள்ளது. இதை தெரிந்துக்கொண்ட அ.தி.மு.க.வினர் தேர்தல் நெருங்குவதால் போராட்டம் என்கிற பெயரில், 'தேர்தல் நாடகம்" நடத்த முயற்சிக்கிறார்கள். நீங்கள் என்ன நாடகம் போட்டாலும் மூன்று வேளாண் சட்டங்களை ஆதரித்ததை விவசாயிகள் மறக்கவில்லை.

'அரசு சார்பில் மாம்பழக்கூழ் ஏற்றுமதி மையம் (MANGO EXPORT ZONE)

கடந்த 20062011 தி.மு.க. ஆட்சியில் 'மா" விவசாயிகள் எதிர்கால நலன் கருதி, சட்டமன்றத்தில் நான் பலமுறை கேட்டுக் கொண்டதன் அடிப்படையில், முத்த மிழறிஞர் கலைஞர், அன்றைய துணை முதல்வ ரும், இன்றைய முதல்வரு மான - தளபதியார் ஆகியோரின் அறிவுறுத்தல் பேரில், அன்றைய மாவட்ட ஆட்சியர் சந்தோஷ்பாபு முயற்சியால் மாம் பழக்கூழ் ஏற்றுமதி மையம் அமைத்திட கிருஷ்ண கிரி ஒசூர் சாலையில் சிக்காரி மேடு அருகில் நிலம் கையகப்படுத்தப்பட்டு 'கிரிஸ்மா" என்கிற பிராண்டை உருவாக்கி கோப்புகள் தயாரிக்கப்பட்டு, மத்திய அரசின் நிறுவன நிதி பங்களிப்புடன் நிதி உதவி கோரப்பட்டு பூர்வாங்க பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வந்தது.

2011 ஆட்சி மாற்றத்திற்கு பின் திட்டத்தை கிடப்பில் போட்ட அ.தி.மு.க. ஆட்சி!

2011 ல் அதிமுக ஆட்சிக்கு வந்து 2021 வரை 10 ஆண்டுகள் ஆட்சி செய்தீர்களே! அ.தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் உயர் கே.பி.முனுசாமி அமைச்சராக உயர்ந்த பதவியில் இருந்தீரே!

அப்போது எல்லாம் 'மா" விவசாயிகள் ஞாபகம் வரவில்லையா? 'மா" விவசாயிகளுக்கு எள்முனையாவது எதாவது செய்ததுண்டா? தி.மு.க. ஆட்சி கொண்டு வந்த மாம்பழக்கூழ் ஏற்றுமதி மையம் தொடங்கி நடத்திட மனம் வரவில்லையா?

உங்களது 10 ஆண்டுகால ஆட்சியில் 'மா" விவசாயிகள் பாதிக்கப்படவே இல்லையா? மா விவசாயிகளுக்கு குறைந்த பட்ச ஆதார விலை நிர்ணயம் செய்திட ஏன் முயலவில்லை? உங்கள் ஆட்சியில் பாதிக்கப்பட்ட விவசாயி கள், மா மரங்களை வெட்ட வில்லையா?

பாரூர், அரசம்பட்டி பகுதிகளில் மழை, புயல் காற்றால் லட்சக்கணக்கான தென்னை மரங்கள் நாசமானதே! நஷ்ட ஈடு ஏதாவது கொடுத்தீர்களா? வறட்சியால் பல லட்சம் மா மரங்கள், தென்னை மரங்கள் காய்ந்து போனதே, விவசாயி களுக்கு நிவாரணம் ஏதாவது வழங்கினீர்களா?

தி.மு.க. அரசு எப்படி பொறுப்பேற்க முடியும்?

'கல்டார் மருந்து" பயன்படுத்தியதால் 'பூஞ்ச்" நோய் ஏற்பட்டு மாம்பழம் அழுகியதற்கும், தனியார் மாம்பழக்கூழ் ஆலை உரிமையாளர்கள் மாம்பழங்கள் கொள்முதல் செய்யாததற்கும் 'தி.மு.க. அரசு எப்படி பொறுப்பேற்க முடியும்" அதிமுக பொதுச் செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி, துணை பொதுச்செயலாளர் கே.பி.முனுசாமி ஆகியோர் 2025 மார்ச் 12 முதல் மே வரை தமிழ்நாடு சட்டமன்றம் நடந்ததே! மா விவசாயிகளை பற்றி ஏன் பேசவில்லை. 'மா" விவசாயிகள் அப்போது உங்கள் கவனத்திற்கு வரவில்லையா?

விவசாய சங்கங்கள் கோரிக்கை மற்றும் எங்களது கோரிக்கைகளை ஏற்றுக் கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் தளபதியார் அவர்கள் 'மா" விவசாயிகள் உற்பத்தி செய்த மாம்பழங்களை கொள் முதல் செய்திட மாவட்ட ஆட்சியர் மூலம் உத்திரவிட்டு கொள் முதல் நடைபெற்று வருகிறது.

மாம்பழத்திற்கு குறைந்த பட்ச ஆதாரவிலை நிர்ணயம் செய்திட ஆலோசனைகள் நடைபெற்று வருவதை அறிந்துக் கொண்ட அதிமுகவினர் 'அரசில் நாடகத்தை" அரங்கேற்றியுள்ளனர்.

உங்கள் அரசியல் நாடகம் எடுப்படாது? விவசாயிகளுக்கு எதிரான மூன்று வேளாண்மைச் சட்டங்களை ஆதரித்த போதே! நீங்கள் விவசாயிகளின் எதிரிகள் என்பது தெரிந்துவிட்டது.

நான்காண்டுகால திராவிட மாடல் ஆட்சியில் சுமார் 2 லட்சம் விவசாயி களின் பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கிதோடு, மழை, புயலால் பாதிக்கப்பட்ட விவசாயி களுக்கு நிவாரணம், வட்டியில்லா பயிர்க்கடன், கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு 'தோட்டக்கலை கல்லூரியும்", கம்பு ராகி விவசாயி களை ஊக்குவிக்க ரேஷன் கடைகளில் சிறுதானிய கொள்முதலையும் ஊக்குவித்து விவசாயி களுக்கு தனியாக நிதிநிலை அறிக்கை, கரும்பு, நெல்லுக்கு கூடுதல் விலை வழங்கியும், கடந்த நான்கு ஆண்டுகளாக ஜூன் 12ல் மேட்டூர் அணையை திறந்தும் விவசாயிகள் வயிற்றில் பால் வார்த்து வரும் முதல்வர் அவர்களின் பின்னால் தான் விவசாயிகள் நிற்பார்கள் என்பதை 2026 சட்டமன்ற தேர்தல் நிரூபிக்கும். இது உண்மை.

இவ்வாறு தி.மு.க. மாநில அமைப்புசாரா ஓட்டுநர் அணி மாநிலச் செயலாளர் டி.செங்குட்டுவன் தெரிவித்துள்ளார்.

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதி, குருவேலப்பர் கோவில் ஊராட்சியில் நடைபெற்ற "மக்களுடன் முதல்வர்" மூன்றாம் கட்ட திட்ட முகாமினை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் துவக்கி வைத்து பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பி.ரெத்தினசாமி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் மற்றும் துறை சார்ந்த அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

கடலூர் கிழக்கு மாவட்டத்தில் - ஓரணியில் தமிழ்நாடு -

இல்லங்கள்தோறும் சென்று கழகத்தில் 60 சதவீதம் உறுப்பினர்களைச் சேர்ப்போம்!

கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

கடலூர், ஜூன்.20- கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம்,19.06.2025, திங்கள் கிழமை, பிற்பகல் 12.30 மணியளவில், காணொலி காட்சி மூலமாக, கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி தலைமையில் நடைபெற்றது.

கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ., தொகுதி பொறுப்பாளர்கள் ஏ.அங்கையர் கன்னி, விஜயன்ராகவன், சுவை.சுரேஷ், எம்.எம்.சிவா,அ.பாரிபாலன், முன்னாள் எம்.எல்.ஏ., துரை.கி.சரவணன், மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினரும், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், தொகுதி பொறுப்பாளருமான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில், கடலூர் கிழக்கு மாவட்டத்தில் 20-ம் தேதி முதல் ஓரணியில் தமிழ்நாடு என்ற கழக தலைவர் அவர்களின் அறிவிப்பினை அமல்படுத்தும் விதமாக இல்லங்கள்தோறும் கழக நிர்வாகிகள் சென்று பொதுமக்களை சந்தித்து, கழகத்தில் 60 சதவீதம் புதிய உறுப்பினர்களை சேர்த்திடல் வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட கழக துணை செயலாளர் அ.ஞானமுத்து, ஆர்.சக்திவேல், சுதாசம்பத், ஒன்றிய செயலாளர்கள்: காட்டுமன்னார்கோவில் மேற்கு அ. முத்துசாமி, குறிஞ்சிப்பாடி தெற்கு வி.சிவக்குமார், திருமுட்டம் கிழக்கு தங்க.ஆனந்தன், குறிஞ்சிப்பாடி வடக்கு ஆர்.நாராயணசாமி, கம்மாபுரம் தெற்கு கே.ஆர்.ராயர், கம்மாபுரம் வடக்கு பா.திருமாவளவன், கம்மாபுரம் மத்திய பி.சுந்தரபாண்டியன், கடலூர் கிழக்கு தெ.காசிராஜன், கடலூர் மேற்கு பி.சுப்பிரமணியன், கடலூர் தெற்கு ஆர்.விஜயசுந்தரம்,

குமராட்சி கிழக்கு த.சங்கர், குமராட்சி தெற்கு ம.சோழன், குமராட்சி வடக்கு வி.கோவிந்தசாமி, குமராட்சி மேற்கு கே.நடராஜன், பரங்கிப்பேட்டை தெற்கு ஆர்.கலையரசன், பரங்கிப்பேட்டை மத்திய எம்.மனோகரன், புவனகிரி கிழக்கு ஏ.எஸ்.மதியழகன், கீரப்பாளையம் கிழக்கு வி.ஜி.பி.சபாநாயகம், கீரப்பாளையம் மேற்கு டி.திருமூர்த்தி, திருமுட்டம் வடக்கு எஸ்.செந்தில்குமார், திருமுட்டம் மேற்கு கே.ஆர்.கோவிந்தராஜ், குமராட்சி மத்திய ஆர்.ராஜேந்திரன், பரங்கிப்பேட்டை தெற்கு இரா.கலையரசன், புவனகிரி மேற்கு ஏ.எம்.மதியழகன், புவனகிரி மத்திய வெற்றிவேலு , கீரப்பாளையம் மத்திய வி.பி.பாலு, கடலூர் வடக்கு கே.ஆர்.தனஞ்செயன்,

கடலூர் மத்திய கே.மகேஷ், காட்டுமன்னார்கோவில் த.ஜெயபாண்டியன், கடலூர் மாநகர செயலாளர்: கே.எஸ்.ராஜா, கடலூர் பகுதி செயலாளர்கள்: ப.நடராஜன், பா.வெங்கடேஷ், எஸ்.சலீம், மு.இளையராஜா, வடலூர் நகர கழக செயலாளர் த.தமிழ்ச்செல்வன், வடலூர் நகரமன்றத் தலைவர் எஸ்.சிவக்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர்கள்- வ.ஞானசேகரன், வே.விக்கிரமன், பொதுக்குழு உறுப்பினர்கள்: கே.பி.ஆர்.பாலமுருகன், த.ஜேம்ஸ்.விஜயராகவன், இரா.தமிழரசன், ச.கல்யாணசுந்தரம், மு.வெற்றிவேல், என்.டி.கணேசன், மஞ்சு, பா.கோதண்டபாணி,

பேரூர் செயலாளர்கள்: காட்டுமன்னார்கோவில் எஸ்.கணேசமூர்த்தி, குறிஞ்சிப்பாடி கு.வே.ப.ஜெய்சங்கர், சேத்தியாதோப்பு ப.மனோகரன், திருமுட்டம் பூ.செல்வகுமார், புவனகிரி த.கந்தன், அண்ணாமலை நகர் க.பழனி, லால்பேட்டை எம்.அன்வர்சதாத், பரங்கிப்பேட்டை மாவட்ட கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள்: மாணவரணி அமைப்பாளர் அப்பு ஆர்.சந்தியநாராயணன்,

பொறியாளர் அணி அப்பு சந்திரசேகரன், தொண்டரணி ஆராமுது, விவசாய அணி பொன்.பன்னீர்செல்வம், விவசாய தொழிலாளர் அணி ம.இராமசாமி, மகளிர் அணி த. அமுதராணி, மகளிர் தொண்டரணி, ப.மனோரஞ்சிதம், வழக்கறிஞர் அணி பி.அருள்ஜோதி, ஆதிதிராவிடர் நல்லக்குழு ஆர்.பரந்தாமன், சிறுபான்மை யினர் நல உரிமை பிரிவு எம்.எஸ்.முகமது யூனூஸ், வர்த்தகர் அணி ஆர்.ரெங்கநாதன், தொழுச பி.பழனிவேல்,

தகவல் தொழில்நுட்ப அணி ஏ.ஜாபர் அலி, விளையாட்டு மேம்பாட்டு அணி பூ.சதீஷ்குமார், மீனவர் அணி வீ.செல்வபாரதி, அயலக அணி வாசு, தொழிலாளர் அணி கி.தண்டபாணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி தாணூர் சிவக்கொழுந்து, இலக்கிய அணி பழனிசாமி, டி.வெங்கடாஜ லபதி, கலை இலக்கிய பிரிவு, ஜி.சின்னமணி, தகவல் தொழில்நுட்ப அணி அ.முத்தமிழ்செல்வன், வி.எம்.வெற்றிசெல்வன், ப.பிரவின்குமார் உள்ளிட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.

மாம்பழக் கூழ் உற்பத்தி செய்யும் ஆலைகள் - உடனடியாக

மாங்கனிகளை கொள்முதல் செய்திட வேண்டும்!

அரசு செயலர் வலியுறுத்தல்!

சென்னை, ஜூன் 20- தமிழ்நாட்டில் மாம்பழக் கூழ் உற்பத்தி செய்யும் ஆலைகள் விவசாயிகளிடமிருந்து மாங்கனிகளை உடனடியாகக் கொள்முதல் செய்ய அரசு செயலாளர் வலியுறுத்தி உள்ளார்.

தமிழ்நாட்டில் சுமார் 1.46 இலட்சம் எக்டரில் மா சாகுபடி மேற்கொள்ளப்பட்டு 9.5 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. கிருஷ்ணகிரி, திண்டுக்கல், தருமபுரி, திருவள்ளூர், தேனி, திருப்பத்தூர், சேலம், வேலூர் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் அதிக அளவில் மா சாகுபடி செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில் பெங்களூரா, பங்கனபள்ளி, இமாம்பசந்த், நீலம், செந்தூரா, அல்போன்சா, ருமானி போன்ற இரகங்கள் அதிக அளவில் பயிரிடப்படுகின்றன. மா இரகங்களைப் பொறுத்தவரை, இயற்கையாகவே ஒரு ஆண்டில் அதிக மகசூலும் அதனைத் தொடர்ந்து, அடுத்த ஆண்டு குறைவான மகசூலும் தரும் தன்மை கொண்டது. இந்த சுழற்சி பெரும்பாலும் அனைத்து மா இரகங்களிலும் காணப்படுகிறது.

நடப்பாண்டில், பருவ நிலை மா உற்பத்திக்கு உகந்தாக அமைந்ததால் சராசரி மகசூலான எக்டருக்கு 5 முதல் 6 மெட்ரிக் டன் என்பது எட்டு மெட்ரிக் டன்னுக்கும் மேலாக அதிகரித்துள்ளது. இந்த உற்பத்தி அதிகரிப்பினால் மாம்பழக்கூழ் தயாரிப்பு மற்றும் பதப்படுத்துதலுக்கு உகந்த பெங்களூரா இரகம், பதப்படுத்தப்படும் நிறுவனங்களால் விவசாயிகளிடமிருந்து கிருஷ்ணகிரி உள்ளிட்ட மாவட்டங்களில் குறைந்த விலைக்கு கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

இது குறித்து கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மாம்பழக்கூழ் உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் விவசாயிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி உரிய விலை நிர்ணயித்த பின்னரும் மாம்பழக்கூழ் உற்பத்தியாளர்கள் குறைந்த விலையில் கொள்முதல் செய்து வருகின்றனர்.

இதனைத் தொடர்ந்து வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் தலைமையில், தோட்டக்கலைத்துறை இயக்குநர், கிருஷ்ணகிரி, திண்டுக்கல், தருமபுரி, திருவள்ளூர், தேனி, திருப்பத்தூர், சேலம், வேலூர், மதுரை ஆகிய மாவட்ட தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் மற்றும் மா பதப்படுத்தும் நிறுவனங்களுடன் 16.6.2025 அன்று ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில், மா பதப்படுத்தும் தொழிற்சாலைகளில் சென்ற ஆண்டின் மாம்பழக் கூழ் கையிருப்பு அதிகம் உள்ளதால், பதப்படுத்தும் நிறுவனங்களின் தேவை குறைந்துள்ளதாகவும், மா உற்பத்தி அதிகம் இருப்பதால், விவசாயிகளிடமிருந்து உரிய விலைக்கு மா கொள்முதல் செய்ய இயலாத நிலை உள்ளது எனவும், ஜூன் 20க்கு மேல் மா வில் இனிப்புத் தன்மை (TSS) 20° பிரிக்ஸ் என்ற அளவில் இருக்கும் என்பதால் அப்பொழுது விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்து கொள்வதாகவும், பதப்படுத்தும் நிறுவனங்களால் தெரிவிக்கப்பட்டது.

மா உற்பத்தி செய்யும் விவசாயிகளின் நலன் கருதி மா பதப்படுத்தும் நிறுவனங்கள் மாம்பழக்கூழ் தயாரிக்கும் பணிகளை உடன் தொடங்கவும், மாம்பழக்கூழ் தயாரிக்க பெங்களூரா இரகத்தினை நியாயமான விலையில் உடனடியாக உழவர்களிடமிருந்து மா பதப்படுத்தும் நிறுவனங்கள் கொள்முதல் செய்ய வேண்டும் எனவும், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் கேட்டுக்கொண்டார். அதற்கு, மாம்பழக்கூழ் தயாரிக்கும் நிறுவனங்கள் ஆவன செய்வதாகத் தெரிவித்து மாம்பழக்கூழ் உற்பத்தியினை தற்போது ஆரம்பித்து உள்ளனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் நகரத்தில் வாக்குசாவடி வாரியாக கள ஆய்வு கூட்டம் மண்டலப் பொறுப்பாளர் ஆ.ராசா எம்.பி, மாவட்டச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் ஆலோசனைப் படி, திருப்பெரும்புதூர் தொகுதிப் பார்வையாளர் கே.ஜி.பாஸ்கர் சுந்தரம் பூத் எண்கள் 196, 200, 211, 212, 188, 190, 215, 216 ஆகிய பூத்களில் BLA2, BLC மற்றும் கிளை கழக நிர்வாகிகளுக்கு ஆலோசனை வழங்கினார். குன்றத்தூர் நகரச் செயலாளர் கோ.சத்தியமூர்த்தி கூட்டத்தினை ஏற்பாட்டு செய்திருந்தார்.

மாவட்ட செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! பி.ஸ்ரீராமுலு தலைமை!

சென்னை கிழக்கு மாவட்ட திமுக விவசாய தொழிலாளர் அணி சார்பில் துறைமுகம் மேற்கு பகுதியில் ஜூன் 3 முத்தமிழறிஞரின் 102 வது பிறந்தநாள் - செம்மொழி நாள் விழா!

ஸ்ரீ பாதம் தாங்கிகளுக்கு நலத்திட்ட உதவிகள் - அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் - சிவஞான பாலைய சுவாமிகள் - மயிலம் பொம்மபுர ஆதீனம் வழங்குகின்றனர்!

சென்னை, ஜூன்.20- சென்னை கிழக்கு மாவட்ட திமுக விவசாய தொழிலாளர் அணி சார்பில் துறைமுகம் மேற்கு பகுதியில் ஜூன் 3 முத்தமிழறிஞரின் 102 வது பிறந்த நாள் செம்மொழி நாளை முன்னிட்டு செம்மொழி -1 பாதம் தாங்கிகளை நாம் தாங்குவோம்! பக்தி பண்பாட்டின் வழி காட்டுவோம்!! எனும் தலைப்பில் மாபெரும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நாளை (21.06.2025 - சனிக்கிழமை) மாலை 4.00 மணியளவில், சென்னை, சௌகார்பேட்டை திருப்பள்ளி தெரு சிவாஞ்ஜி ஜெயின் பவனில் நடைபெறுகிறது.

இந்நலத்திட்ட விழாவில் சென்னை கிழக்கு மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் பி ஸ்ரீராமுலு தலைமை வகிக்கிறார்.

சென்னை கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத் துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், இரா.நரேந்திரன், ஜி.எம்.தேவன், பி.ஸ்ரீராமுலு, இசட்.ஆசாத், எம்.பி.எம். சேக்அப்துல்லா, ஆர்.கலைச்செல்வி, எம்.இ.கனி, எல்.சம்பத்குமார், எம்.வினாயகம், பி.விஜயகுமார், ராஜேஷ் ஜெயின், பா.ஜெகதீஷ் முன்னிலை வகிக்கின்றனர்.

துறைமுகம் மேற்கு கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: மா.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.ரவிச்சந்திரன்பா. அண்ணாதுரை, ஜி.ராமமூர்த்தி டி.சதீஷ்குமார், சேப்பாக்கம். வே.பா.பிரபாகரன் எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.ஏ. அஸ்லாம், டி.கதிரவன், எம்.பரத்குமார், கே.கவியரசு ஐ.நா. பார்த்திபன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இந்நலத்திட்ட விழாவில் ஸ்ரீ பாதம் தாங்கிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன், சிவஞான பாலய சுவாமிகள் (மயிலம் பொம்மபுர ஆதீனம்) ஆகியோர் வழங்கி சிறப்பிக்கின்றனர்.

மேலும், இந்நலத்திட்ட விழாவில் மேயர் பிரியா ராஜன், ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, A.வெற்றியழகன், எம்.எல்.ஏ, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, ப.ரங்கநாதன், K.S.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, பி.கே.மூர்த்தி, கே.சந்துரு, K.S.M.நாதன், சி.மகேஷ்குமார். மாவட்ட நிர்வாகிகள்: கோ.ஏகப்பன், தேவஜவஹர், புனிதவதி எத்திராசன், பகுதி கழக செயலாளர்கள்: ICFவ.முரளிதான், எ.நாகராசன், MC, செ.தமிழ்வேந்தன், எம்.சாமிக்கண்ணு, வே.வாசு, கூ.பி.ஜெயின், சொ.வேலு MC வி.சுதாகர் DSP.ராஜகோபால் Mc M.T.R. நாகராஜன். சுதா தீனதயாளன். ராஜேஸ்வரி ஸ்ரீதர், வானவில் விஜய், ந.துலுக்கானம், பி.உதயசங்கர், தாமோதரன், LPF மோகன், பெரோஸ்கான், வெ.பரிமளம், L. நவீன். பகுதி கழக நிர்வாகிகள்: மே.ஜனார்தனன், K.R. அபரஞ்சி, ம.முத்துக்குமார், ந.சுந்தரம் S.சந்தியாகு, செ.தமிழ்வாணன், V.சந்தானலட்சுமி, சி.ப.ஜெயராமன் பூக்கடை.எஸ்.வெங்கடேசன், எல்.சாந்திலால். ஆகியோர் சிறப்பிக்கின்றனர்.

வட்ட கழக செயலாளர்கள் பா. கதிரவன், மா. ஜெய்சங்கர் ,ஆர் ரவிச்சந்திரன் ஆகியோர் நன்றி கூறுகிறார்கள்.

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி தொகுதியில் உட்பட்ட 37 திருநங்கைகளுக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்க வேண்டும் என்று நீண்ட நாட்கள் கோரிக்கையை ஏற்று திருத்தணி வட்டாட்சியர் அலுவலகத்தில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ பட்டா வழங்கினார் கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றுவதற்காக முதலமைச்சர் மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டார்கள். உடன் ஒன்றிய பொறுப்பாளர் பா. ஆர்த்திரவி, மாவட்ட சிறுபான்மை நல உரிமை பிரிவு அமைப்பாளர் ஜி. சித்திக் அலி, நகர துணைச் செயலாளர் ஜி.எஸ்.கணேசன், உள்பட கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.